*13*

# பரிசுத்த ஆவியானவர் கொண்டுவரும் கண்டித்து உணர்த்துதல்

## (யோவான் 16)

*"நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார். இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" (வசனங்கள் 7-12).*

அவர் தமது அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவார் என்பது, இயேசுவின் மரணத்திற்கு முந்திய வியாழக்கிழமை இரவில் மேல் வீட்டில் அவர் தமது அப்போஸ்தலர்களுக்குத் தெரிவிக்க நாடிய முக்கியமான ஒரு சத்தியமாக இருந்தது. அவர்களின் எதிர்காலப் பணிப்பொறுப்பிற்குத் தேவையான உதவியை ஆவியானவர் அவர்களுக்கு அளிப்பார். உண்மையில் பரிசுத்த ஆவியானவர் வரக்கூடும்படியே இயேசு அவர்களை விட்டுச் சென்றார். உடனடியான எதிர்காலத்தில், சபையில் இயேசு ஆண்டவர் என்ற வகையில் தமது ஆளுகையைத் தொடங்குகையில் (நடபடிகள் 2:36), பரிசுத்த ஆவியானவர் போதித்தல் மற்றும் வழிநடத்துதல் என்ற தமது ஊழியத்தைத் தொடங்க வேண்டி இருந்தார். இந்த உண்மைகளின் வெளிச்சத்தில், பரிசுத்த ஆவியானவர் வந்து தமது ஊழியத்தைத் தொடங்கக் கூடும்படிக்கு, அப்போஸ்தலர்களின் அனுகூலத்திற்காகவே இயேசு பிரிந்து செல்ல வேண்டி இருந்தது. அப்போஸ்தலர்களுக்கு அவர் (ஆவியானவர்) தேவைப்பட்டார், மற்றும் அவர் இன்றி இந்த உலகம் இரட்சிக்கப்படக் கூடாதிருந்தது.

பரிசுத்த ஆவியானவர் வந்தபோது, அவர் மும்மடங்கு செயலுடன், கண்டித்து உணர்த்தும் ஊழியத்தில் ஈடுபடுவார். (1) அது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களான அப்போஸ்தலர்களை ஆசீர்வதிக்கும். (2) அது கர்த்தருடைய பூமிக்குரிய வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றின் முழுமைத் தன்மையை உறுதிப்படுத்தும். (3) அது கிறிஸ்தவர் அல்லாதவர்கள் மனந்திரும்புதலுக்கு

வரக்கூடிய வழியாக இருக்கும் - அது தேவனுடன் உடன்படிக்கை உறவிற்கு வழிநடத்தும் வகையிலான மனந்திரும்புதலாக இருக்கும்.

பரிசுத்த ஆவியானவர், இயேசுவின் போதனைகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைக் குறித்து உலகத்தை எவ்வாறு கண்டித்து உணர்த்துவார் என்பதை இயேசு, யோவான் 16:7-12ல் சிறப்பாக அழுத்திக் கூறினார்.

## கலகம்/மீறுதல்

கிறிஸ்தவரல்லாத உலகத்தாருக்கு ஆவியானவர், பாவத்தைக் குறித்துக் கண்டித்து உணர்த்த வேண்டியிருந்தது. இயேசு, "அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத் தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" என்று கூறினார் (16:8). அவர் தம்மை மறுதலித்தல் என்ற பாவத்தின் உண்மை நிலை மற்றும் குற்ற உணர்வு பற்றி அவர்களைக் கண்டித்து உணர்த்துவார். சரியானது மற்றும் தவறானது ஆகியவற்றைப் பற்றி இந்த உலகம் தனது சொந்த தர அளவைகளைக் கொண்டுள்ளது. அது நீதியைக் குறைத்து, பாவத்தை மகிமைப் படுத்துகிறது. அது பாவத்தைக் கண்டனம் செய்வதற்குப் பதிலாக அதை அங்கீகரிக்கிறது, மற்றும் அது இயேசுவை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக அவரைச் சிலுவையில் அறைந்தது. சார்லஸ் ஆர் எர்ட்மான் அவர்கள் இந்த சத்தியத்தைப் பிரதிபலித்தார்:

> இது அவிசுவாசம் ஒரு பாவம் என்று அர்த்தப்படுவதில்லை; அது அவ்வாறே உள்ளது; ஆனால் இது இந்த உலகம் பாவம் நிறைந்ததாக, கிறிஸ்துவைப் புறக்கணிப்பதில் தாழ்நிலையில் அல்லது ஆதாரம் கொண்டு உள்ளதாகப் பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்துவார் என்றே அர்த்தப்படுகிறது, கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாதிருத்தல் பாவமாக உள்ளது; ஆனால் ஒருவர் கிறிஸ்துவைப் புறக்கணித்தல் என்பது அவர் பாவியாக இருக்கிறார் என்று காண்பிக்கிறது என்பதே இங்கு போதிக்கப்படும் சத்தியமாக உள்ளது. கிறிஸ்து நல்லவராக, பரிசுத்தராக, மற்றும் தூய்மையானவராக இருக்கிறார்; அவரைப் புறக்கணித்தல் என்பது, ஒருவர் நற்தன்மையையும் பரிசுத்தத்தையும் தூய்மையையும் அன்பையும் எதிர்த்து நிற்கிறார் என்று தம்மையே கண்டித்து உணர்த்துதலாக உள்ளது. கிறிஸ்து பிரசங்கிக்கப்படும்போது, அவர் பண்பின் உரைகல்லாக ஆகிறார்.[1]

பரிசுத்த ஆவியானவர் - ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்கள் மற்றும் ஏவுதல் பெற்ற வேதவசனங்கள் மூலமாக - பாவத்தின் உண்மை நிலையை மாத்திரமல்ல ஆனால் பாவத்தின் அழிக்கும் இயல்பையும் இந்த உலகத்திற்குக் காண்பிப்பார். அவர் பாவம் என்றால் இன்னது என்று அடையாளப்படுத்தி, அதன் குணத்தைத் தெளிவாக்கி அது எங்கு நடத்திச் செல்லுகிறது என்ற அடைவிடம் பற்றி விவரிப்பார்.

இயேசு, "அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும், ... கண்டித்து உணர்த்துவார்" என்று கூறினார் (16:8, 9). எல்லாப் பாவங்களுமே தேவனுடைய பிரமாணங்களை அல்லது கட்டளைகளை மீறுதல் என்று விவரிக்கப்பட முடியும்.

இருப்பினும் இயேசு கூறியதைப் போன்று நாம், தேவனுடைய வார்த்தையையும் அவரது இரட்சிப்பின் வழியையும் நமக்குக் கொண்டுவருமாறு அனுப்பப்பட்ட, தேவனுடைய குமாரனாகிய அவரைப் புறக்கணித்தல் என்பது மாபெரும் பாவமாக உள்ளது என்று கூற முடியும். இது சாவுக்கேதுவான பாவமாக உள்ளது. இயேசு பிரிந்து சென்றபின்பு, இயேசு பேசியிருந்த வார்த்தைகளின், அவர் செய்திருந்த செயல்களின் மற்றும் அவர் உலகத்திற்குக் கொண்டு வந்திருந்த இரட்சிப்பின் நினைப்பூட்டுதலைப் பரிசுத்த ஆவியானவர் தருவார். செய்தியையும் கிறிஸ்துவின் நபர்த்துவத்தையும் புறக்கணித்தவர்கள் தங்களை ஆக்கினைத் தீர்ப்பிற்கு உட்பட்டவர்களாகக் காண்பார்கள். அப்போஸ்தலர்கள் மற்றும் ஏவுதல் பெற்ற பிறமனிதர்கள் மூலமாக ஆவியானவர் செயல்படுகையில் இந்த சத்தியத்தை உறுதிப்படுத்துதலே அவரது சாட்சியமாக இருந்தது.

## நீதி

இத்துடன் கூடுதலாக, நீதியைப் பொறுத்த மட்டிலானவை குறித்து ஆவியானவர் இந்த உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். இயேசு, “அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், *நீதியைக்குறித்தும்,* ... உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்” என்று கூறினார் (16:8; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பரிசுத்த ஆவியானவர், உண்மையான நீதி எது என்பதை இந்த உலகத்திற்குக் காண்பிக்கவும், அவர்கள் சிலுவையில் அறைந்திருந்த இயேசு, தேவனுடைய நீதிமான் என்பதை நிரூபிக்கவும் வேண்டியிருந்தது. அவர், நீதியை விரும்புகிறவர்களை, தேவனுடனான ஒரு சரியான உறவிற்கு வழிநடத்தி உண்மையான இருதயங்களை விசுவாசத்தின் நீதியை நோக்கி வழிநடத்துவார். இப்படிப்பட்ட நீதியானது, தேவனுடைய கட்டளைகளில் நடத்தல் மூலமாக வருகிறது. ஒருவர் இதைப் பெற்று இதில் நிலைத்திருப்பதற்கு, அவர் இதற்குள் வழிநடத்தப்பட்டு இதற்குள் நிலைநிறுத்தப்பட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திற்குத் தேவனிடம் இருந்து அனுப்பப்பட்ட சத்தியத்தைக் கொடுப்பதன் மூலம், ஆச்சரியம் நிறைந்த இந்த நோக்கங்களை நிறைவேற்றுவார்.

உலகத்திற்கு, “நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்து” கண்டித்து உணர்த்துதல் தேவைப்படுகிறது (16:10) என்று நமது கர்த்தர், தமது அப்போஸ்தலர்களிடம் விளக்கி உரைத்தார். நீதி என்றால் என்ன என்பதை அவர், அப்போஸ்தலர்களுக்கும் இந்த உலகத்திற்கும் காண்பித்திருந்தார். இதை இனியும் இங்கு பிரசங்கிக்க இயேசு இருக்க மாட்டார் மற்றும் வாழ்ந்து காண்பிக்க இங்கு இருக்க மாட்டார் என்றாலும், எழுதப்பட்ட வார்த்தையைப் பயன்படுத்திப் பரிசுத்த ஆவியானவர் இந்த போதிக்கும் பணிப்பொறுப்பை மேற்கொள்ள வேண்டியிருந்தது. உலகம் அநீதியாக இருந்ததால் இயேசுவைப் புறக்கணித்து இருந்தது, ஆனால் அவர் மரித்தோரில் இருந்து உயிர்த்து எழுந்ததையும் அவர் பரலோகத்திற்கு ஏறிச்சென்றதையும் அறிவித்தலின் மூலம், அவரது நீதியை ஆவியானவர் உறுதிப்படுத்துவார். அவர் இயேசுவின் மத்தியஸ்த தன்மையை, பிதாவின் வலது புறத்தில் இருந்து கொண்டு அவர் செய்யும் பரிந்துரைக்கும் பணியை அறிவிப்பார்.

## தண்டித்தல்

மூன்றாவது, பரிசுத்த ஆவியானவர், நியாயத்தீர்ப்பைக் குறித்து இந்த உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். இயேசு, "அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், *நியாயத்தீர்ப்பைக் குறித்தும்*, உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" என்று கூறினார் (16:8; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஆவியானவர் இந்த உலகத்திற்குத் தற்போதைய நியாயத்தீர்ப்பு ஒன்றையும் எதிர்கால நியாயத்தீர்ப்பு ஒன்றையும் பற்றிக் கூற வேண்டி இருந்தது. நியாயத்தீர்ப்பு வந்திருந்தது என்று இயேசு பிரசங்கித்திருந்தார்: "இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" (12:31). அவர் முன்னதாக வைக்கப்பட்டுள்ள கடைசி, நித்திய நியாயத்தீர்ப்பைப் பற்றியும் அறிவிப்பார் (12:48; மத்தேயு 25:34-46). இதைப்போன்ற செய்திகளை உலகத்திற்கு வெளிப்படுத்துதல் என்பது ஆவியானவரின் பணிப்பொறுப்பில் ஒரு பகுதியாக இருந்தது. தேவன் தாம் நியமித்த நாளில், கணக்கு ஒப்புவிக்கும்படி ஒவ்வொருவரையும் அழைப்பார், மற்றும் உலகமானது இந்த சத்தியத்தை எதிர்கொள்ள வேண்டும். இல்லையென்றால், கணக்கு ஒப்புவித்தல் என்ற கருத்தைப் பாவிகள் புறக்கணிப்பார்கள். ஆவியானவரின் சாட்சியத்தின் மூலமாக, இந்த செய்தி, பூமியில் இழந்துபோகப்பட்டுள்ள மக்களுக்குத் தொடர்ந்து முன்வைக்கப்பட முடியும்.

பரிசுத்த ஆவியானவர், ''இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும்" (16:11) மக்களுக்குக் கண்டித்து உணர்த்த வரவேண்டி இருந்தது. இயேசு, தமது நீதியான வாழ்விலும், பாவத்திற்காகத் தாம் மரித்ததிலும், தமது போதனைகளிலும், இந்த உலகத்திற்கு நியாயத்தீர்ப்பு ஒன்றைக் கொண்டு வந்திருந்தார். அவர் அதன் ஆட்சியாளர்களை, அந்தகாரத்தின் பிரபுக்களை, அவர்களைப் பின்பற்றும் எல்லாருடனும் நியாயம் தீர்த்திருந்தார். இந்த நியாயத்தீர்ப்பு இயேசுவின் வாழ்விலும் சிலுவையில் அவரது மரணத்திலும் தெளிவாக அறிவிக்கப்பட்டது. இருந்தபோதிலும், உலகத்திற்குக் கிடைக்கும் நியாயத்தீர்ப்பு பற்றிய செய்தியானது உலகத்திற்கு முன்பாகத் தெளிவாக வைக்கப்பட வேண்டும். ஆவியானவர் வந்தபோது அவர் இந்தப் பணியைச் செய்ய வேண்டியவராக இருந்தார்.

## முடிவுரை

பரிசுத்த ஆவியானவரின் வருகை பற்றி இயேசு தமது அப்போஸ்தலர்களுடன் நடத்திய உரையாடலில், பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திற்கு, தேவனிடத்தில் இருந்து புறம்பே இருந்த மக்களுக்கு என்ன செய்வார் என்ற தமது குறிப்புரைகளைச் சுருக்கமாகக் கொடுத்தார். அவர்களுக்கு அவர், இந்த உலகம் எதிர்கொள்ள வேண்டியிருந்த குறிப்பிடத்தக்க மூன்று பகுதிகளை நினைவூட்டினார்: பாவம், நீதி மற்றும் நியாயத்தீர்ப்பு - அதாவது, கலகம், நீதி மற்றும் தண்டனை ஆகிய மூன்று பகுதிகள். உலகத்தின் மக்கள், தாங்கள் தேவனிடத்தில் இருந்து பிரிந்திருப்பதைப் பற்றி, தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி, மற்றும் தேவனுக்கு அவர்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருத்தல் பற்றி போதிக்கப்பட வேண்டும்.

இந்த வார்த்தைகளைச் சிந்தையில் கொண்டு, ஏவுதல் பெற்ற வேதவசனங்களில் இருந்து இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட வேண்டியது என்ன? இழந்துபோகப்பட்ட நபர் கேள்விப்பட வேண்டியது என்ன? இதை இயேசு ஒரு வாக்கியத்தில் சுருக்கி உரைத்தார்: "அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும் கண்டித்து உணர்த்துவார்" *(16:8-11).*

---

*"சில நாளைக்குப்பின்பு பேலிக்ஸ் யூத ஸ்திரீயாகிய தன் மனைவி துருசில்லாளுடனேகூட வந்து, பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக்கேட்டான். அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்" (நடபடிகள் 24:24, 25).*

*"எந்த அவிசுவாசிக்கும், பாவம், நீதி மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவற்றைப் பற்றிக் கண்டித்து உணர்த்துதல் என்பது மனித திறனுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. குறிப்பிட்ட சில பாவத்திற்குப் போதுமான ஆதாரம் இருந்தால், அவரை ஒரு நியாயாதிபதிக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தி அவரது குற்றத்தை உணர்த்துதல் சாத்தியமானதாக இருக்கலாம்; ஆனால் அவர் ஒரு பாவியாக இருக்கிறார், பொல்லாத இருதயம் கொண்டுள்ளார் மற்றும் அவர் கிறிஸ்துவை விசுவாசியாது இருக்கிறபடியால் தண்டனைக்குத் தகுதியானவராக இருக்கிறார் என்று அவரை ஒப்புக்கொள்ளச் செய்தல் என்பது முற்றிலும் வேறுவிஷயமாக உள்ளது. ஒழுக்கத்தின் சில தர அளவைகளுக்கு ஒரு மனிதரைக் கொண்டுவருதல் என்பது மிகவும் கடினமானதல்ல; ஏனெனில் ஏறக்குறைய ஒவ்வொரு நபருமே, ஒழுக்க விதிக்கு இணையான உயர்கொள்கைகளைக் கொண்டுள்ளனர். அவரது சுயநீதியானது தேவனுடைய நீதியுடன் ஒப்பிடுகையில் அழுக்கான கந்தையாக உள்ளது என்ற தாழ்மையான மனச்சான்றை அவருக்குள்ளாக உருவாக்குதல் என்பது சாதாரண தூண்டுதலால் செயல்விளைவிக்கப்பட இயலாததாக உள்ளது."*[2]

---

குறிப்புகள்

[1]Charles R. Erdman, *The Gospel of John: An Exposition* (Philadelphia: Westminster Press, 1946), 145. [2]Merrill C. Tenney, *John: The Gospel of Belief* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1948), 237.